# ஆயர் திருமுகம்

**Pastoral letter No/GR/ 23/ 2015** 6/2/2015

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருட்தந்தையர்களே, அருட்சகோதரிகளே, அன்பு சகோதரர் சகோதரிகளே,

நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக.

இவ்வாண்டைய தவக்காலம் பிப்ரவரி மாதம் 16 ஆம் தேதி தொடங்க இருக்கிறது. இக்காலத்தில், மனித மீட்பிற்காக இயேசு ஏற்றுக்கொண்ட சிலுவைப்பாடுகளையும், மரணத்தையும் குறித்து நாம் நினைவு கூருகிறோம். இயேசு, தமது பொதுவாழ்வை தொடங்குவதற்கு முன்பாக, நாற்பது பகலும் நாற்பது இரவும் நோன்பு ஏற்றதும், இத்தவக்காலத்தின் விவிலியப் பின்புலமாக உள்ளது. நமது சீரோ மலபார்த் திருச்சபையைப் பொறுத்தவரை, இத்தவக்காலமானது, ஐம்பது நாட்களை உள்ளடக்கியது. *பேத்றுத்தா* எனப்படும் ஞாயிறைத் தொடர்ந்து வரும் திங்கள் அன்று சாம்பல் பூசுதலுடன் இத்தவக்காலம் ஆரம்பிக்கிறது. *பேத்றுத்தா* என்னும் சொல்லுக்கு, திரும்பிப்பார்த்தல் அல்லது மனவருந்துதல் எனத் தமிழில் பொருள் கொள்ளலாம்.

கடவுள் மீது கொள்ளும் ஆழமான விசுவாசமே, மனவருந்துதலுக்கு அடிப்படைக் காரணி. ஆனால், இவ்விசுவாசமோ, கருணைச் செயல்கள் வழியாகவே செயலாக்கம் பெறுகின்றன. ஆகையால், நாம் கடவுள் மீது கொள்ளும் விசுவாசமானது, கருணைச் செயல்கள் மேற்கொள்ளவும், சகோதர அன்பிலும் கடவுள் அன்பிலும் நிலைத்திருக்கவும் உறுதுணை புரிய வேண்டும். இதை, புனித யாக்கோபு தமது திருமுகத்தில், ‘‘நம்பிக்கைச் செயல்வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும்’’ (யாக் 2:17) எனத் தெளிவுப்படுத்துகிறார். தவக்காலத்தில், திருப்பலியினிடையே நாம் சொல்லும் ஆர்ப்பரிப்பு மன்றாட்டின் இறுதி செபத்தில் மூன்று காரியங்கள் அறிவுறுத்தப்படுகின்றன. அவையாவன, ‘‘நேர்மையான செபம்’’, ‘‘சகோதர அன்பு’’ மற்றும் ‘‘தியாகம்’’. இவை குறித்து சற்று விரிவாகப் பார்ப்போம்.

முதலாவதாக செபத்தைக் குறித்த சில சிந்தனைகளைப் பார்ப்போம். செபம் வழியாக நாம் கடவுளோடு நிரந்தர உறவில் வாழ முடியம். இது, தவக்காலத்தின் மிக முக்கியமான நோக்கம் எனலாம். திருப்பலியே, நாம் மேற்கொள்ளும் செபங்களில், மிகவும் உன்னதமானது என்பதை நாம் அறிந்ததே. கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் திருமுழுக்கின் வழியாக, மெசியாவின் பொதுக்குருத்துவத்தில் பங்கேற்றவர்கள்; அதே வேளையில், குருக்கள், பொதுக்குருத்துவம் பெற்றிருப்போருக்கு, ஆன்மீக பணிவிடை புரிவதற்கான சிறப்பு அழைப்பு பெற்று பணிக்குருத்துவம் பெற்றவர்கள். அதனால், திருப்பலியில் தலைமை ஏற்பது குருவாக இருந்தாலும், பலி ஒப்புக்கொடுப்பதோ பொதுக்குருத்துவத்தில் பங்கேற்றிருக்கும் தூய இனமான இறைமக்கள் முழுவதுமே. ஆகையால், ஒவ்வொரு கிறிஸ்தவரும் மிகக் கவனத்துடன் திருப்பலியில் பங்கேற்க வேண்டும் என்று திருச்சபை அறிவுறுத்துகிறது. இதை, இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தின் திருவழிபாடு என்னும் ஏடு மிக நுணுக்கமாக உணர்த்துகிறது. எண் 48 இல் பின்வருமாறு வாசிக்கிறோம்; ‘‘எனவே கீழ்வருவனவற்றில்மேல் திருச்சபை மிகுந்த அக்கறை கொள்கின்றது: விசுவாசத்தின் இம்மறைபொருள் நிறைவேற்றப்படும்போது விசுவாசிகள் அதனுடன்

தொடர்பு அற்றவர்கள்போல் அல்லது அமைதி காக்கும் பார்வையாளர்கள் போல் இராமல், சடங்குகள், இறைவேண்டல், ஆகியவற்றின் வாயிலாக அதனை நன்றாகப் புரிந்துகொண்டு, அத்தூய செயலை உணர்ந்து அதில் பக்தியுடனும் செயல்முறையிலும் பங்குபெற வேண்டும்''.

இத்தவக்காலத்தில், திருப்பலியில் மிகுந்த பக்தியுடன் பங்கேற்க உறுதிமொழி ஏற்போம். இதுவே, நாம் திருச்சபையை முழுமையாக அன்பு செய்வதுனுடைய வெளிப்படையான அடையாளம். காரணம் என்னவெனில், திருச்சபை, திருப்பலி என்னும் மறைபொருளின் மீது கட்டியெழுப்பப்பட்டிருக்கிறது. இதனாலேயே, ''திருச்சபைக்கு வடிவம் கொடுப்பது திருப்பலி'' என திருச்சபைத் தந்தையர்கள் கூறுகிறார்கள். திருப்பலியில் முழுமையாக பங்கேற்போர், திருச்சபையை முழுமையாக அன்பு செய்கிறார்கள் என்பது தெளிவு. நாம் திருப்பலியில் முழுமையாக பங்கேற்கும் போது திருச்சபையை அன்பு செய்கிறோம்; திருச்சபையை அன்பு செய்வோர் இயேசுவை அன்பு செய்கிறார்கள்; காரணம், திருச்சபை இயேசுவின் மறையுடலே அன்றி வேறல்ல.

செபத்தின் பகுதியே, குடும்ப செபம். கிறிஸ்தவர்களாகிய நாம் இறையாற்றல் பெறவும், ஒற்றுமை உணர்வை உள்ளூர உணரவும், குடும்ப செபம் மிகவும் அவசியமானது. குடும்பமாக கூடி வந்து, முழங்காலில் நின்றவாறு, செபிக்கும் செபமாலையும், மேற்கொள்ளும் விவிலிய வாசிப்பும், தேவைகளை முன்வைத்து ஏறெடுக்கும் தனி செபங்களும் குடும்பங்களைக் கட்டிக்காக்கும். ''கூடி செபிக்கும் குடும்பம் கூடி வாழும்'' என்னும் பழமொழியும் நாம் அறிந்ததே. தனிப்பட்ட முறையில் செபம் செய்யவும் நான் உங்களை அழைக்கிறேன். இரவில் தூங்குவதற்கு முன்போ, இல்லையென்றால் காலையில் துயிலெழும் போதோ, சில மணித்துளிகள் இறைவார்த்தையை வாழ்வோடு ஒப்பிட்டுப் பார்த்து தியானிக்க நான் உங்களை கேட்டுக்கொள்கிறேன். இது, வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்தும். சிறு சிறு செபங்கள் தனிப்பட்ட முறையில் மேற்கொள்ளுதல் ஆன்மத் தூய்மையை ஏற்படுத்தும். குடும்ப செபங்களும், தனிப்பட்ட செபங்களும் நாம் ஒப்புக்குகொடுக்கும் திருப்பிலியின் பகுதிகளாகக் காண்போம்.

இரண்டாவதாக, சகோதர அன்பைக் குறித்து பார்ப்போம். நாம் கிறிஸ்தவர்கள் என்பதற்கு மிகப்பெரிய அடையாளமாக இருப்பது நாம் பிறர் மீது கொள்ளும் அன்பும் அக்கறையுமே. சகோதர அன்பின் உள்ளியல்புகளுள் ஒன்றான மன்னிப்பைக் குறித்து நான் சற்று விளக்க விரும்புகிறேன். நமக்கு துரோகம் செய்தவர்களுக்காகவும், நம்மை வெறுப்போருக்காகவும், நாம் விரோதிகளாக கருதுபவர்களுக்காகவும் செபிப்பதே மன்னிப்பின் முதல் கட்டம் எனலாம். நாம் ஏறெடுக்கும் செபங்களைக் கடவுள் ஏற்றுக்கொள்ளவும், நமது பாவங்களை அவர் மன்னிக்கவும், பிறரை மன்னித்தல் மிக அவசியமாகிறது. ''மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்கமாட்டார்'' (மத் 6: 15) என்று இயேசு நமக்குக் கற்பிக்கிறார். எத்தனையோ பேர் நமக்கு எத்தனையோ நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். நமது வாழ்நாளில் நாம் எத்தனையோ பேருக்கு கடன்பட்டிருக்கிறோம். அத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நம்மை வெறுப்போரின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு தானே? அவர்களை நாம் விரல்விட்டு எண்ணிவிடலாம் அன்றோ? ஆனால் நாம் கடன்பட்டிருப்போரின் பெயரை பட்டியலிட்டு காட்ட முடியுமா? அதனால், நாம் எதிரிகள் என நினைப்போருக்காக மனப்பூர்வமாக செபிப்போம்.

அன்பு மன்னிக்கும் இயல்பை உடையது என நாம் பார்த்தோம். இத்தோடு இணைத்தே, ஒப்புரவு என்னும் அருளடையாளத்தைக் குறித்தும் நாம் சிந்திக்க வேண்டும். நாம் அடிக்கடி பெற்றுக்கொள்ளும் ஒப்புரவு அருளடையாளம், பாவங்களிலிருந்து நம்மை விடுவிப்பதோடு, தீமைகளில் தடுக்கி விழாமல் உறுதியாக நிற்கவும் வலிமை அளிக்கிறது. குடும்பமாக ஒப்புரவு அருளடையாளத்தை பெற்றுக்கொள்ளவது

சாலச்சிறந்தது. இது, குடும்பத்தை பிணைத்து உறுதியாக நிறுத்தும். ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்றுக்கொள்ள நாம் இளந்தலைமுறையினருக்கு அறிவுறுத்த வேண்டும்; அத்தோடு, தவக்காலத்தின் சிறப்பம்சங்களான செபவாழ்வும் தியாக வாழ்வும் மேற்கொள்ள அவர்களுக்கு பயிற்சியும் முன்மாதிரியும் கொடுக்க வேண்டும். நல்ல பாவசங்கீர்த்தனம் செய்வோம். அதன் வழியாக உயிர்ப்பின் மகிழ்ச்சியில் பங்கேற்போம். இதுவே தவக்காலம் விடுக்கும் பிறிதொரு முக்கியமான செய்தி.

மூன்றாவதாக, தியாக வாழ்வைக் குறித்துப் பார்ப்போம். இயேசுவின் சிலுவைப் பாடுகளும், மரணமும் பாவ மன்னிப்பையும் உலக மீட்பையும் கொணர்ந்தது. இயேசு சிலுவையில் ஒப்புக்கொடுத்த பலியில் பங்கேற்கும் நாமும் அவரைப் போன்று பிறருக்காக தியாகங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். இத்தவக்காலம் தியாகங்கள் செய்தவற்கான உகந்த காலம். கண்களுக்குப் புலப்படும் விதத்தில் சில தியாகங்களையாவது நாம் மேற்கொள்வோம், எடுத்துக்காட்டாக, புகைப்பழக்கம் உடையோர் அதை கைவிடுதல், குடிப்பழக்கமுடையோர் குடியை நிறுத்துதல், உண்ணும் உணவை எளிமையாக மாற்றுதல், ஆடம்பரங்களைத் தவிர்த்தல் போன்றவை. நாம் மேற்கொள்ளும் இத்தியாகங்களின் பலனாகக் கிடைக்கும் பணத்தை, தேவைகளில் இருப்போரின் மேம்பட்ட வாழ்விற்காக கொடுத்து உதவுவோம். மேலும், சோம்பல் தவிர்த்து அதிகமான வேலை செய்யவும் தவக்காலம் ஏற்றது. இத்தியாகம் வழியாக நாம் கடவுளின் படைப்புபணியில் பங்கேற்கிறோம்.

செபம், ஒறுத்தல், பரிகாரச்செயல்கள், இரக்கச் செயல்கள் போன்றவற்றின் வாயிலாக, ஊனுடலின் இச்சைகளைக் களைவதற்கான ஏற்றக் காலம் தவக்காலம் எனத் திருச்சபைத் தாய் நம்மை அறிவுறுத்துகிறாள். நாற்பது நாட்கள் தவம் மேற்கொண்டு, தீவினையை விரட்டியடித்த இயேசு நமக்கு முன்மாதிரியாக நிற்கிறார். பாவத்தின் பாதையை வெறுத்து ஒதுக்கி, வாழ்வின் பாதையைத் தேர்ந்து, அருளடையாளங்கள் வழியாக தூய்மையை நோக்கிப் பயணிக்க இக்காலம் ஏற்றது. விவிலியம் வாசிக்கவும், குடும்ப செபம் மேற்கொள்ளவும், தனி செபம் செய்யவும் அதிக நேரம் ஒதுக்குவோம். திருப்பலியில் முழுமையாக பங்கேற்க ஆர்வம் காட்டுவோம். நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து ஆன்ம தூய்மை அடைவோம். நாம் செய்யும் சிறுசிறு தியாகங்களும், இரக்கச்செயல்களும் நம்மைக் கடவுளோடும், சக மனிதர்களோடும் நெருங்கி வாழச் செய்யும். இத்தவக்காலம், இதற்கு உறுதுணையாக அமையட்டும். இது, நம்மை உயிர்ப்பின் மகிழ்ச்சியில் பங்குப் பெறச் செய்யும்.

**மறைமாவட்ட மையத்திலிருந்து சில செய்திகள்**

1. 2014, நவம்பர் மாதம் 23 ஆம் தேதி, அகில உலகத் திருச்சபை, புனித, சாவறா மற்றும், புனித எவுப்ராசியா ஆகியோரை புனிதர்களாக உயர்த்தியது. இச்செய்தி நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம். நாமும் இம்மாபெரும் நிகழ்வை, கோட்டாறு மற்றும் மார்த்தாண்டம் மறைமாவட்டங்களோடு இணைந்து வருகின்ற பிப்பரவரி மாதம் 22 ஆம் தேதி பிற்பகல் 1.30 மணிக்கு பிலாங்காலையில் வைத்து விழாவாகக் கொண்டாட இருக்கிறோம். அன்றைய தினம், திருப்பலியும் தொடர்ந்து பொதுக்கூட்டமும் நடைபெறும். இதை நம்முடைய குடும்ப விழாவாகக் கண்டு, அனைத்து இறைமக்களும் தவறாமல் பங்கேற்க வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன். அனைத்து பங்குகளிலிருந்தும் மக்கள் கலந்து கொள்ள வேண்டும்.
2. நம்முடைய மறைமாவட்டத்தில், “துறவற ஆண்டு” தொடக்க நிகழ்வானது, இம்மாதம் முதல் நாள் நடைபெற்றது (01.02.2015). அர்ப்பணிக்கப்பட்ட வாழ்வு மேற்கொள்வோர் அனைவரும் இறைவனுடைய

கொடைகள். நமது அருட்தந்தையர்களையும் அருட்கன்னியர்களையும் மனதில் கொண்டு, தயாரித்துத் தரப்பட்டுள்ள செபத்தை உங்கள் குடும்பங்களில் செபிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

3. இவ்வாண்டு, கடவுள் நமக்கு ஏழு திருத்தொண்டர்களைத் தந்துள்ளார். இவர்களுடைய குருத்துவ அருட்பொழிவு ஏப்ரல் மாதத்தில் நடக்க இருக்கிறது. இம்மாபெரும் கொடைக்காக இறைவனுக்கு நன்றி செலுத்துவதோடு, திருத்தொண்டர்களுக்காக செபிப்போம்.

ஆண்டவரின் ஆசி உங்கள் அனைவரோடும் தங்கியிருப்பதாக.

மெசியாவில் அன்புடன்,

**+மார் ஜார்ஜ் ராஜேந்திரன் ச.ச.**
**தக்கலை மறைமாவட்ட ஆயர்**

---

குறிப்பு: இச்சுற்றுமடலை பெப்ரவரி 15 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை வாசிக்கவும்.